[2008 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி சென்னைக்கு கடந்த ஆண்டு ஆயிரம் புதிய பேருந்துகளும், இந்த ஆண்டு ஆயிரம் புதிய பேருந்துகளும் என்று முதலமைச்சர் அவர்கள் வழங்கியதுபோல, மதுரையிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகத்திற்கு அதனுடைய பழைய பேருந்துகளை மாற்றுவதற்காக அவர்களுக்கு கூட்டும் தனியாகவே, ஆயிரம் புதிய பேருந்துகளை இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எனவே, விரைவில் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை. மாறாக, திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

164—

கட்டட வசதி

***2741—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேரூர் துணை சுகாதார நிலையம் தற்போது குடும்ப நலத் துறைக்குச் சொந்தமான அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, பேரூர் துணை சுகாதார நிலையத்திற்கென புதிய கட்டடம் கட்ட தற்போது அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

2008 ஏப்ரல் 28]

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதிக்குட்பட்ட சுகுணாபுரம், குனியமுத்தூர் ஆகிய இரண்டு இடங்களில், துணை சுகாதார நிலையக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே, இந்த அரசு கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும், மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட மேடூர், வெல்ஸ்புரம், காலனிபுதூர், குஜகனூர், சாஸ்திரி நகர், வடவள்ளி, சென்னம்பாளையம், பெரியகுமாரபாளையம் ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலையம் கட்டுவதோடு, சிறுமுகை, வீரபாண்டி ஆகிய பேரூராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 8,706 துணை சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 6,510 மையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. 2,196 துணை சுகாதார நிலையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன. 234 துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்தமாகக் கட்டடங்கள் கட்டுவதற்காக, நபார்டு வங்கிமூலம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. அந்நிதியுதவி வந்தால், இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வியைக் கேட்பதற்கு முன்னால், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், வருகின்ற தொழிலாளர்கள் தினமான மே தினத்தையொட்டி, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்க வேண்டிய arrears தொகையை . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவிந்தசாமி, என்ன?

திரு. சி. கோவிந்தசாமி: இல்லை, இல்லை, நன்றி சொல்லிவிட்டு, என்னுடைய துணைக் கேள்விக்குப் போகிறேன். அனுமதியுங்கள். ஒரே நிமிடம்தான். ஆகவே, வழங்குவதாக அறிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு போக்குவாத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும்,

[2008 ஏப்ரல் 28

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய துணைக் கேள்விக்குப் போகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றியைத்தான் சொல்கிறேன். வேறு மூன்றும் கேட்கவில்லை.

ஆகவே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புவது, இந்த சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுகின்றபோது, அதிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களும் தங்குவதற்குரிய வீட்டுவசதியோடு, quarters வசதியோடு அந்தக் கட்டடங்கள் கட்டப்படுமா? ஏனென்றால் அப்படி இல்லாத காரணத்தால் பல மருத்துவர்கள் இரவு நேரங்களில் அங்கே தங்குவதில்லை. அவசரமாக டெலிவரியோ அல்லது மற்ற கேஸ்கள் என்று வரக்கூடிய பொதுமக்கள் இதனால், பல பாதிப்பிற்குள்ளாகுகிற காரணத்தினால், மருத்துவர்கள் அங்கேயே தங்குகிற அடிப்படையில் வீட்டுவசதியோடு, அந்தப் புதிய கட்டடங்கள் சுகாதாரத் துறைமூலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களில், இப்போது 38 ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இந்த ஆண்டு கட்டுவதற்கு நிதிநிலை அறிக்கையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனமரத்துப்பட்டி சட்டமன்ற தொகுதி, பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட குரால்நத்தம் ஊராட்சியிலே உள்ள துணை சுகாதார நிலையக் கட்டடம், மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. அந்தக் கட்டடம் பயன்பாட்டிற்கு இல்லாத நிலையில் இருக்கிறது. அதிலே புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

2008 ஏப்ரல் 28]

(முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியின்மூலமாக கடன் கோரப்பட்டுள்ளது. அது வந்தவுடன் நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ராசிபுரத்திலே போதமலை கிராமத்திற்காக ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு, தற்போது அது கள்ளங்குளம் என்ற ஊராட்சியிலே இயங்கி வருகிறது. ஏனென்று கேட்டால், போதமலைக்கு நடந்து செல்கின்ற பாதையாக இருக்கிற காரணத்தால், அங்கே சாலை வசதி இல்லாத காரணத்தால், அது தற்காலிகமாக நம்முடைய கள்ளங்குளம் பகுதியிலே இயங்கி வருகிறது. அதற்கு ஊர் பொது மக்கள் எல்லாம் சேர்ந்து நிலமும் அரசுக்கு வாங்கிக் கொடுத்துள்ளார்கள். அந்த இடத்திலே நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டித் தர முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.